தமிழ்நாடு அரசு

சுருக்கம்

கல்வித் தகுதி - பொதுப் பணிகளில் நியமனம் செய்ய அண்ணாமலை திறந்தவெளி பல்கலைக் கழகத்தால் (Open University) வழங்கப்படும் பட்டப் படிப்பு, முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு ஆகியவற்றை அங்கீகாரம் செய்தல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை

*அரசு ஆணை நிலை எண். 216* நாள்: 26.8.97

படிக்கப்பட்டது

1. அரசு ஆணை நிலை எண். 441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(ஆர்) துறை, நாள் 20.12.93.
2. அண்ணாமலை பல்கலைக் கழக பதிவாளரது கடித எண். DDE/A1/96, நாள் 6.9.96.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளரது கடித எண். 1421/RND-A5/97, நாள் 9.5.97.

-----

**ஆணை:**

அண்ணாமலை திறந்தவெளி பல்கலைக் கழகத்தால் (Open University) வழங்கப்படும் பட்டப் படிப்பு, முதுநிலை பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு ஆகியவை அண்ணாமலை பல்கலைக் கழகத்தால் முறையாக (Regular Stream) வழங்கப்படும் பட்டப் படிப்பு, முதுநிலை பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்புக்கு இணையாக கருதி ஆணை வெளியிடுமாறு அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் பதிவாளர் அரசைக் கேட்டுள்ளார்.

2. 20.12.93 நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(ஆர்) துறையின் அரசு ஆணை நிலை எண் 441-ல் ஆணை வெளியிட்டவாறு தமிழ நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரை தலைமையாகக் கொண்டு இதற்கென அமைக்கப்பட்ட குழுவின் (Committee) முன்னர், அண்ணாமலை பல்கலைக் கழக பதிவாளரது கோரிக்கை பரிசீலனைக்காக வைக்கப்பட்டது.

3. 11.4.97 அன்று நடந்த குழு கூட்டத்தில் அண்ணாமலை திறந்தவெளி பல்கலைக் கழகத்தால் (Open University) வழங்கப்படும் பட்டப்படிப்பு, முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு; அண்ணாமலை பல்கலைக் கழகத்தால் முறையாக வழங்கப்படும் (Regular Stream) பட்டப் படிப்பு, முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புக்கு சமமாக கருத தீர்மானித்து அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

4. குழுவின் பரிந்துரைகளை அரசு தீவிர பரிசீலனைச் செய்து ஏற்றுக் கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, அரசு அண்ணாமலை திறந்தவெளி பல்கலைக் கழகத்தால் (Open University) வழங்கப்படும் பட்டப்படிப்பு, முதுநிலைப் பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு, அண்ணாமலை பல்கலைக் கழகத்தால் முறையாக (Regular Stream) வழங்கப்படும் பட்டப் படிப்பு, முதுநிலைப் பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பிற்கு சமமாகக் கருதி பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்கு அங்கீகாரம் அளிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ. பாஸ்கரதாஸ்
அரசு செயலாளர்

பெறுநர்:

அனைத்துச் செயலர்கள், தலைமைச் செயலகம், சென்னை - 9.
அனைத்துத் துறை தலைமை அலுவலர்கள்.
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை - 9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை - 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9.
பதிவாளர், அண்ணாமலை பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர் - 608 002.
செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை - 2.

நகல்:

உயர் கல்வித்துறை, சென்னை - 9.
தொழிலாளர் & வேலை வாய்ப்புத் துறை, சென்னை - 9.

/பணிந்தனுப்பப்படுகிறது/

(sd/-)
S. ஆறுமுகம்
பிரிவு அலுவலர்

குஉ./26/8

(உண்மை நகல்)